ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2059/28 - 2018 පෙබරවාරි මස 20 වැනි අඟහරුවාදා - 2018.02.20

*2059/28 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சங்கங்கள் கட்டளைச் சட்டம்

சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 123) 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆகிய நான், இந்த அறிவித்தல் மூலம்,

1. கட்டளைச் சட்டத்தின் தத்துவங்கள் மற்றும் வசதிகள் வரையறுக்கின்ற நோக்கங்களுக்கிணங்க கொழும்பு 05, திம்பிரிகஸ்யாய வீதி, இல. 446/6 இல் அமைந்துள்ள "ரோயல் இன்ஸ்டிடியுட் ஒப் பிரிட்டிஷ் ஆகிடெக்ட்ஸ் மெம்பர்ஸ் ஸ்ரீ லங்கா" என்ற பெயரைக் கொண்ட சங்கத்தின் நோக்கங்களுக்கு அதிகாரமளிக்கின்றேன் ; மற்றும்

2. அக்கட்டளைச் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் ஏற்பாட்டிற்கிணங்க மேற்கூறப்பட்ட சங்கத்திற்கு குறித்த கட்டளைச் சட்டத்தின் பிரயோகத்தை வரையறுக்கின்றேன்.

ரிசாட் பதியுதீன்,  
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு,  
இல. 73/1, காலி வீதி,  
கொழும்பு 03,  
2018, சனவரி 30.

03-310